# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*


<u>வழக்கு எண் 8876/விசாரணை/2009</u>

<u>கோவையில் விசாரணை நடைபெற்ற நாள் 18-9-2009</u>

| | |
|---|---|
| முன்னிலை: | திரு ஜி. இராமகிருஷ்ணன, இ.ஆ.ப.(ஓ.)<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர்: | திருமதி ராஜம்மாள், க/பெ திரு பொன்மலைத் தேவர் 2/1, நேரு வீதி, காந்தி நகர், ஒண்டிப் புதூர் அஞ்சல், கோயமுத்தூர் - 641 016. |
| பொது அதிகார அமைப்பு: | பொதுத் தகவல் அலுவலர், நிர்வாக அலுவலர் அலுவலகம், பள்ளப்பாளையம் பேரூராட்சி, கோவை மாவட்டம். |

*****

இவ்வழக்கில் இன்றைய (18-9-2009) விசாரணைக்கு மனுதாரரும் பொது அதிகார அமைப்பின் சார்பில் அழைக்கப்பட்டிருந்த பொதுத் தகவல் அலுவலரும் வந்திருந்தனர்.

மனுதாரர் தன்னுடைய 13-4-2009 நாளிட்ட மேல் முறையீட்டு மனுவில் காந்தி நகர் எனும் ஊரில் குறிப்பிட்ட வீதி தார் ரோட்டில் ஆனதா அல்லது மண் ரோடா என்ற கேள்வி எழுப்பி தகவல் கேட்டுள்ளார். பேரூராட்சி அலுவலகம் 30.6.08 தேதியிட்ட கடிததத்தின் மூலமாக கான்க்ரீட் ரோடு என்று தகவல் தரப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலரின் 31-7-2008 தேதியிட்ட கடிதத்தின் மூலமாக குறிப்பிட்ட வீதி மண் ரோடு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கும் மேலாக, கோவை ஊராட்சிகளின் உதவி இயக்குநர் தனது 14-11-2008 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக, அது குறித்த விவரங்கள் ஏதுமில்லை என பள்ளப்பளையம் பேரூராட்சியின் செயல் அலுவலர் தெரிவித்ததாக பதில் அனுப்பப்பட்டுள்ளது. ஒரு சாலை பற்றிய தகவல் கேட்கும்போது மூன்று மாத காலத்தில் மூன்று விதமான பதில்கள் வழங்கப்பட்டுள்ளது வினோதமானது. இவ்வாறு முன்னுக்குப் பின் முரணாக பதிலளித்தமைக்காக மேற்படி பேரூராட்சியின்

செயல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு 20(1)-ன்கீழ் நடவடிக்கை எடுத்து தண்டனை வழங்கி அதனுடைய விவரத்ததை இவ்வாணை பெறப்பட்ட ஒரு மாத காலத்திற்குள் ஆணையத்திற்குத் தெரிவிக்குமாறு சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் பணிக்கப்படுகிறார்.

பள்ளப்பாளையம் பேரூராட்சியின் நிர்வாக அலுவலர் அந்தப் பாதையை நேரடியாகச் சென்று பார்வையிட்டு அது தார் ரோடா, கான்க்ரீட் ரோடா அல்லது மண் ரோடா என்ற விவரத்தை இவ்வாணை பெறப்பட்ட ஒரு வார காலத்திற்குள் மனுதாரருக்த் தெரிவிக்குமாறு ஆணையிடப்படுகிறார்.

.

**மாநில தகவல் ஆணையம்**

**ஒப்புதல் அளிக்கப்பட்ட நாள் 8.10.09**
**ஆணையத்தின் ஆணைப்படி** **உதவிப் பதிவாளர்**

<u>வழக்கு எண் 8876/விசாரணை/2009</u>
பேரூராட்சிகளின் இயக்குநர்,
குறளகம்,
சென்னை – 600 108.

<u>வழக்கு எண் 8876/விசாரணை/2009</u>
பொதுத் தகவல் அலுவலர்,
நிர்வாக அலுவலர் அலுவலகம்,
பள்ளப்பாளையம் பேரூராட்சி,
கோவை மாவட்டம்.

<u>வழக்கு எண் 8876/விசாரணை/2009</u>
திருமதி ராஜம்மாள்,
க/பெ திரு பொன்மலைத் தேவர்
2/1, நேரு வீதி, காந்தி நகர்,
ஒண்டிப்புதூர் அஞ்சல்,
கோயமுத்தூர் - 641 016.